கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

# சங்கச் சங்கதிகள்



பதிப்பு 7 – பங்குனி 2023

w: canberratamilassociation.org.au e: cta1983@hotmail.com.au

## தலைமைக் குறிப்பு

வணக்கம்

வேகமாக மாறிக்கொண்டிருக்கும் நாட்டு நடப்புகளுக்கேற்ப எங்களை மாற்றிக்கொள்ளவேண்டியது அவசியம். அது காலத்தின் கட்டாயமும் கூட!

மாற்றங்களை எதிர் கொண்டு உள்வாங்கி, அதற்கேற்ப தன்னைத் தயார் செய்து சவால்களை முறியடித்து மறுமலர்ச்சி கொள்வதில் பொதுவாக தமிழ் சமூகம் முதன்மையானது. முக்கியமாக, புலம் பெயர் தமிழ்ச் சங்கம் இந்த விடயத்தில் மிக மிக முதன்மையானது.

தமிழும் தமிழ் சமூகமும் இன்றுவரை செழித்து வளர்வதற்கு, காலத்தின் கட்டாயத்துக்கேற்ப மாறிக்கொண்டிருப்பது முக்கியமான ஒரு காரணம்.

ஆனாலும் சில விடயங்கள் இங்கே மாறவேயில்லை! உதாரணமாக, பல வருடங்களாக தமிழ்ச் சங்கத்தின் அங்கத்துவக் கட்டணம் மாறவேயில்லை.

விலைவாசியோ விஷம் போல மிக வேகமாகக் ஏறிக்கொண்டே போகிறது! கடந்த மூன்று வருடங்களில், பொது பொறுப்பு காப்பீடு, மண்டப வாடகை, நிகழ்ச்சிகளில் உணவளித்தல் மற்றும் இதர செலவுகள் பலமடங்கு கூடியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே!

அநேகமான அங்கத்தவர்கள் கான்பெரா தமிழ்ச் சங்கத்தின் அங்கத்துவக் கட்டணத்தை மிகவும் நேர்த்தியாகச் செலுத்திவிடுகிறார்கள். உங்களுக்கு நன்றி!

சிலருக்கு, மிகவும் சொற்பமான கான்பெரா தமிழ்ச் சங்கத்தின் அங்கத்துவக் கட்டணத்தைக் கூடச், செலுத்த வைப்பதற்கு எண்ணற்ற நினைவூட்டல்கள் தேவைப்படுகிறது என்பது ஒரு கதை.

நினைவூட்டினாலும் கூட, இன்னும் சிலர் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தாத சௌகரியத்தைத் தமதாக்கிக் கொள்கிறார்கள் என்பது இன்னுமொரு கதை!

இவை இரண்டும் எங்கள் சமுதாயத்தின் துக்கமான அசௌகரியங்கள் என்பது ஒரு கசப்பான உண்மை.

மேலே சொன்ன விடயங்களைக் கருத்தில் கொண்டு...
கான்பெரா தமிழ்ச் சங்கத்தின் அங்கத்துவக் கட்டணத்தை சிறிதாகக் கூட்டலாம் என்று எண்ணவேண்டிய நேரமிது!

இது பற்றி உங்கள் கருத்தென்ன? அறியத்தாருங்கள்! 30 சித்திரை 2023க்கு முன்னதாக எங்களுக்கு உங்கள் கருத்துகளை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வையுங்கள்.

உங்கள் பதில் இந்த யோசனைக்குச் சாதகமாக இருந்தால் இதனை மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

உங்களின் பதிலின்மை அங்கத்துவப் பணத்தை சிறிது அதிகரிப்பதற்கான அனுமதியாகக் கருதப்படும்.

வாழ்க தமிழ்!

Dear Members, CTA membership fee has not changed for many years now, although the expenses like public liability insurance, hall hires, catering cost etc. skyrocketed, particularly in the last 3 years. Clearly, it is time to consider a modest increase of membership fee for CTA to continue its functioning. Let us know what you think by 30 April 2023. We will consider current members' nil response as their agreeance to proceed with an increase through due process. Thank you.



## இனிவரும் எங்கள் நிகழ்வுகள்

**Sunday, 23 April 2023.**

Siththirai Santhippu

CTA will hold this outdoor event for all ages on Sunday, April 23rd from 10.00 am to 3.00 pm. At ANU north oval.

**Saturday, 6 May 2023**

Kuththu with Koththu 2023

Following last years memorable evening of coming together by Canberra Tamil youth, and of course, by popular demand, CTA's Kuththu with Koththu will be held on Saturday, 6 May 2023.

More info to come.

**Saturday, 20 May 2023**

CTA's 40th year anniversary Celebrations begin from 5.00 pm on Saturday, 20 May 2023 at Murranji Theatre, Hawker College.

More info to come.

**Saturday, 10 June 2023**

Inpath Thamizh Vizha 2023

This Vizha is Canberra Tamil School's (CTS) annual event featuring a variety of performances by CTS students.

Watch this space for more information.


நிகழ்வின் நிழல்கள்!
Thai Pongal @ Parliament House
கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழகம்
TAMIL ARTS AND CULTURE ASSOCIATION INC

# கவிதைப் பெட்டகத்தில் இருந்து...

ஆழியாள்

## கடலும் புயலும்

**"சாவிற் றமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்"**

எனும் சாகாவரம் பெற்ற கவி வரிகளை இயற்றியவர் ஈழத்துக் கவிஞர் பண்டிதர் க.சச்சிதானந்தன்.

இம்முறை அவரது '**கடலும், புயலும்**' என்ற கவிதையைப் பார்க்கலாம். சொல்லோசையும், பொருளும், அசைவும் ஒன்றாகக் கலந்து பிரவகிக்கும் மரபுக் கவிதை இது.

கடலில் புயல் உருவாகி எழுவதை நேரடிக் கருப்பொருளாக இக் கவிதை வெளிப்படுத்துகிறது. அதனால் விளக்கக் குறிகாட்டிகளுக்கு அவசியமில்லை.

வேகங்கொண்ட வார்த்தைகளின் தாள, லயத்தின் பாவனையூடாக – புயலினதும், கொந்தளிக்கும் கடலலைகளினதும் ஆங்காரச் சீற்றத்தைக் காட்டும் கவிஞரின் அசாத்திய கவிநடை மற்றும் தமிழ்ப்பாவின் தேர்ச்சி என்பன வாசகருக்கு பெருங்

**மலைகள் புரண்டு புரண்டு விழுந்தது போல்,**<br>
**அலைகள் திரண்டு, புரண்டு மடிந்தனவே;**

**வலைஞர் ஒதுங்க, படகு கலங்க**<br>
**நிலைகள் தளர்ந்து குருகு பதுங்கக்**<br>
**கடல் – புரண்டதுவே.**

**முகில்கள் இருண்டு திரண்டு வெடிக்குதுவே;**<br>
**திகிலி லதிர்ந்திரு திசைகள் பதைக்குதுவே;**

**அகில நடுங்க அவனி குலுங்கப்**<br>
**பகலு மிருண்டு பறவை யொதுங்க**<br>
**இடி – இடிக்குதுவே**

**திரைகள் சுழன்று, சுழன்று கிளம்பினவே;**<br>
**நிரையில் மரங்கள் மரங்கள் வளைந்தனவே;**

**நுரைகள் பிதிர்ந்து கரைகளுடைந்து**<br>
**தரையுமதிர்ந்து இரைதல் எழுந்து**<br>
**புயல் – எழுந்ததுவே.**

**- க. சச்சிதானந்தன்-**



**Your feedback is important to us!**

Please let us know your thoughts on this newsletter through either letting a contributor know or by emailing us at cta1983@hotmail.com.au

## Volunteering opportunities

**Multiple fundraiser events**

We are always looking forward to help from the community for our various charity activities. There are numerous events which require support from our community to give back to charities, both locally and abroad. If you are interested in helping at our next event, please get in contact with a CTA executive committee member , or send us an email!

**ThendralFM Radio (91.1FM)**

ThendralFM continues to actively recruit radio hosts for our adult and youth programs.

# வதந்தி...

ராகவன் சிவபாலன்

ஸ்பானிஷ் மொழியின் "Money Heist", மற்றும் கொரியன் மொழியின் "squid game", போன்ற வேற்றுமொழி வலைத் தொடர்களை (web series) பார்க்கும் பொழுது, எங்கள் மொழியில் இதை போல் நிகழ்ச்சிகள் வெளிவராதா என சில நேரம் தோன்றும்.

இந்த கவலையை தீர்க்க நீங்கள் சமீபத்தில் வெளியான தமிழ் வலைத் தொடர்களான: "வதந்தி", "சுழல்" மற்றும் "விலங்கு" என்பவற்றை பார்க்கலாம்.

2022இல் வெளியான "சுழல்" வலைத் தொடரின் வெற்றியை தொடர்ந்து, மீண்டும் புஸ்கர்-காயத்ரி 2022இல் "வதந்தி" என்கின்ற மர்மத் தொடரையும் தயாரித்தார்கள். நடிகர்கள் விஜய் அந்தோணி மற்றும் அர்ஜுன் நடித்துள்ள "கொலைகாரன்" திரைப்படத்தின் இயக்குனர் அன்ட்ரு K லூயிஸ், இந்த "வதந்தி" வலைத் தொடரின் இயக்குனர் ஆவார் .

இந்த வலைத் தொடரில் வரும் கதை, எங்கள் சமுதாயத்தின் எண்ணங்களை சிந்திக்கவைக்கும். "சுழல்" போல், பல திருப்பங்களும், பதற்றம் ஏற்படும் காட்சிகளும் "வதந்தி"யில் நிறைந்துள்ளன. இந்த வலைத் தொடரின் எட்டு அத்தியாயங்கள் உள்ளன. இதன் தயாரிப்பின் தரமும், விறு விறுப்பான திரைக்கதையும், மற்றும் பின்னணி இசையும் அற்புதமாக இருக்கும் .

இருந்தாலும் எங்கள் தமிழ் மொழிக்கு, ஸ்பானிஷ் மொழியின் "money heist", அல்லது கொரியன் மொழியின் "squid game" அளவில் ஆதரவு கிடைக்குமா?

நிச்சயம் ஒரு நாள் கிடைக்கும் என நம்புவோம்.


COVID-19யை தொடர்ந்து பலர் Netflix, Amazon Prime போல் OTT தளங்களில் வெவ்வேறு மொழி படங்கள் மற்றும் வலைத் தொடர்களை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு, இன்று ராஜமௌலியின் "RRR" திரைப்படத்துக்கு கிடைத்த வரவேற்பு, COVID-19 முன்பு கிடைத்திருக்குமா? Steven Spielberg, James Cameron போன்ற மாபெரும் வெற்றிகரமான மற்றும் பிரபல இயக்குனர்கள் இந்த படத்தை வியந்து பார்த்துளார்கள். அந்த படத்தில் இருக்கும் "நாட்டு நாட்டு" பாடலுக்கு ஒரு Golden Globe மற்றும் ஒஸ்கார் விருதும் கிடைத்துள்ளது.

அதைப் போன்று, தமிழில் வெளியான "The Elephant Whisperers" குறும்படத்துக்கும் சமீபத்தில் சிறந்த குறும்படம் ஒஸ்கார் விருது கிடைத்துள்ளது.

எனவே, ஒரு நாள் தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் அங்கீகாரம் கிடைக்கும் என நம்புகிறோம்.

"வதந்தி", "சுழல்", "விலங்கு" போல் வலைத் தொடர்கள் ஒரு நம்பிக்கையான ஆரம்பத்தை வழி காட்டுகின்றன. இதை தொடர்ந்து புஸ்கர்-காயத்ரி போல் சிறந்த இயக்குனர்களும் மற்றும் எழுத்தாளர்களும் இணைந்து தமிழ் சினிமா ரசிகர்களுக்கு மேலும் சிறந்த வலைத் தொடர்களையும் மற்றும் படங்களையும் தயாரிக்க வேண்டும். வெற்றிமாறனின் "வடசென்னை" கதையும் ஒரு வலைத் தொடராக வெளியாகும் என வதந்தி சமீபத்தில் பரவியது. இதுவும் ஒரு வதந்தியா, அல்லது நிஜமாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!



# இரு நாடகங்கள்

**யோகன்**

நகைச்சுவை நாடகங்கள், பக்தி நாடகங்கள், புராண, காப்பிய நாடகங்கள், சரித்திர நாடகங்கள், சமூக நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் என்று சிறு வயதில் பார்த்த நாடகங்களின் வரிசை நீண்டது. ஆனால் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாகவிருந்தபோது கல்லூரி மண்டபத்தில் அரங்கேறிய இரண்டு நாடகங்களே அப்போது எனக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியிருந்தன. இரண்டும் கல்லூரியின் வெவ்வேறு விழாக்களில் வெவ்வேறு குழுவினரால் மேடையேற்றப்பட்டிருந்த போதிலும் இவை இரண்டுக்கும் ஒரு ஒற்றுமையும் இருந்தது. இரண்டுமே வர்க்க ஒடுக்குமுறைக்கெதிரான மையக் கருக்களைக் கொண்டிருந்தன.

'யுகதர்மம்' பாலைவனமொன்றில் கூலியாளுடன் பயணிக்கும் ஒரு வியாபாரி, பாலைவனத்தில் வழி தவறியதில் கொண்டு போன தண்ணீர் தீர்ந்து போக ஒரு கட்டத்தில் சந்தேகத்தின் பேரில் கூலியாளைக் கொலை செய்வதை சொல்லியது. ஜெர்மன் நாடகாசிரியரான பேர்டோல்ட் பிறெக்ற் எழுதிய Exception and the rule நாடகத்தின் தமிழ் வடிவத்தையே க. பாலேந்திரா, யுக தர்மம் என்ற பெயரில் அரங்கேற்றியிருந்தார். சட்டமும், நீதியும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஒருபோதும் நியாயம் வழங்காது என்பதை எதிர் மறையாக சொல்லித் தாக்கத்தை ஏற்படுத்தும் உத்தியில் அமைந்திருந்த இந்நாடகம் பாடகர் குழுவின் இசையுடன், கதையில் குறியீடுகளையும் கொண்டிருந்தது. உதாரணமாக இறுதியில் வரும் நீதிமன்ற காட்சியில் வரும் பாத்திரங்கள் பொம்மைகளாக சித்தரிக்கப்பட்டது அதிகார சக்திகளுக்குக் கட்டுப்பட்ட நீதிபதிகள் வெறும் பொம்மைகளே என்பதை காட்டியது.







'பொறுத்தது போதும்' ஈழத்து மீனவ சமூகமொன்றில் படகுகளுக்கு சொந்தக்காரனான சம்மாட்டியார் ஒருவரின் சுரண்டல், எதேச்சதிகாரம் என்பவற்றை சொல்லியது. அ. தாசீசியஸினால் முழுக்க முழுக்க உள்ளூர் தயாரிப்பாக இதில் பல்வேறு கூத்து வகைகளுடன், நாட்டாரிசையையும் கலந்து கதையை நகர்த்தி சம்மாட்டியாரின் அடக்கு முறைக்கெதிராக மீனவர் கிளர்ந்தெழுவது போல நேர்மறையாக சொல்லும் பாணியில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டிருந்தது. வறுமையினால் வேறு வழியின்றி சம்மாட்டியாரிடம் கடன் படுவதும், மீனவர் உழைப்பு முழுவதையுமே கடன் வட்டி கட்டுவதிலேயே உறிஞ்சி விடும் ஈவிரக்கமற்ற சம்மாட்டியாரையும், மீனவ சமூகத்தின் நலிந்து போன வாழ்வையும் நாடகம் மேடையில் காட்டியது. தாசீசியஸ் மிகுந்த கற்பனை வளம் கொண்ட கலைஞர் என்பதை அவர் இந்த நாடகத்தில் காட்சிகளுக்குப் பொருத்தமாக பயன்படுத்திய ஆட்ட வகைகள், இசை, நடிகர் அசைவுகள் என்பன நிரூபிக்கின்றன. அவரே இந்த நாடகப் பிரதியை எழுதித் தயாரித்திருந்தார்.

இந்த ரகமான நாடகங்களை இதற்கு முன்னர் பார்த்திராத எனக்கு இவை அப்போது பிரமிப்பூட்டின. ஆனால் இதற்கு முன்னரும் அறுபதுகளின் இறுதியில் அல்லது எழுபதுகளின் ஆரம்பத்தில் என். கே ரகுநாதனின் 'கந்தன் கருணை', மௌனகுருவின் 'சங்காரம்', முருகையனின் ‘கடூழியம்’ போன்ற சாதிய, வர்க்க ஒடுக்குமுறைக்கெதிரான நாடகங்களும், மஹாகவியின் 'கோடை' போன்ற சமூக விழிப்புணர்வை தூண்டும் நாடகங்களும் அரங்கேறியிருந்தனவெனினும் இவற்றை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. எண்பதுகளின் பின்னர் தமிழ் அரங்கு இன்னொரு திசையில் சென்றது.

**DISCLAIMER:** *This newsletter is for informational purposes only. Content of the articles represent the views of the respective authors and the Canberra Tamil Association takes no responsibility for the accuracy of the information in the articles published in this newsletter.*


Multicultural Festival
நிகழ்வின் நிழல்கள்!
CANBERRA TAMIL ASSOCIATION INC
FURNITURE REMOVAL
7 DAY 24 HOURS
0469 082 588
6101 8435
17




# கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்!

உங்கள் சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டுப் பந்தயத்துக்குத் தயாராகுங்கள்!


ஒரு பண்ணையாருக்கு மூன்று மகன்கள். மரணப்படுக்கையில் இருந்த அவர், மூன்று மகன்களையும் அழைத்து, மகன்களே நான் எனது சொத்துகளில், பதினேழு யானைகள் தவிர மற்றவை அனைத்தையும் உங்களுக்கு பங்கிட்டு எழுதி வைத்து விட்டேன்.

யானைகளில் அரைப்பங்கு மூத்த மகனுக்கு. அவன் பெறுவதில் மூன்றில் இரண்டு பங்கு இரண்டாவது மகனுக்கு. இரண்டாவது மகன் பெறுவதில் மூன்றில் ஒரு பங்கு கடைசி மகனுக்கு என கூறிவிட்டு இறந்துவிட்டார்.

மேற்கண்டவாறு பங்கிட முடியாத மகன்கள், அரசரிடம் சென்று ஆலோசனை கேட்டனர். அரசரும் ஒரு குறிப்பிட்ட திகதியில் பதினேழு யானைகளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டிவைத்து தனக்காக காத்திருக்கும்படியும், தான் வந்து எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை தருவதாகவும் கூறினார்.

குறிப்பிட்ட நாளில் அரசரும் வந்து தான் கூறியவாறே எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை கொடுத்தார். அரசர் எவ்வாறு யானைகளை பங்கிட்டு கொடுத்தார்?

## கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்! (பதிப்பு 6) புதிரின் விடை




**Here is how you make the area of $5x^2$ in the first figure into $4x^2$ in the second figure**

**பன்னிரண்டு தீக்குச்சிகளையும் மாற்றி வைத்து உருவாக்கப்பட்ட கேத்திர கணித வடிவம் ABCDE தான் எமக்கு தேவையான அமைப்பு. இப்போது இதன் உள் பரப்பளவு $4x^2$ என்பதை நிறுவுவோம்.**

**ஒரு முக்கோணத்தின் பரப்பளவை காணும் சூத்திரத்தை உபயோகித்து, (ஒரு முக்கோணத்தின் பரப்பளவு= ½ * அடி * உயரம் ), செங்கோண முக்கோணம் APE இன் பரப்பளவு $6x^2$ (1/2 * 3x * 4x )ஆகும். செவ்வகம் BCDP இன் பரப்பளவு $2x^2$ ஆகும். எனவே, ABCDE இன் பரப்பளவு $4x^2$ ஆகும்.**


நிகழ்வின் நிழல்கள்!
Clothes Collection!
NEXUS
cargo
SRI LANKA
Always with you
0416 247 725

# சில நேரங்களில் சில மனிதர்கள்

திருமதி அனிதா ஜெயசிங்கம்




ஜெயகாந்தனின் சாஹித்ய அகாடமி பரிசு பெற்ற நாவல் இது. இக்கதைக்கு ஒரு சுவாரசியமான பின்னணி இருக்கின்றது. ஜெயகாந்தன் அவர்கள் 1966 -ல் அக்னிபிரவேசம் என்ற ஒரு சிறு கதையை ஆனந்த விகடனில் எழுதினார். அக்கதை பின்பு 1970-ல் சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற ஒரு நாவலாக மாறியது. பின்பு 1975-ல் கங்கை எங்கே போகிறாள் என்று தொடர்ந்தது.

1966-ல் அக்னிபிரவேசம் வெளி வந்தபோது அதில் ஒரு தாய் எடுத்த முடிவு, கற்பு பற்றி தமிழ்ச் சமுதாயம் பற்றிக் கொண்டிருந்த ஒழுக்க கோட்பாடுகள் எல்லாவற்றையும் ஒரு உலுப்பு உலுப்பியது. அக்கதையின் முடிவுக்கு மிகுந்த எதிர்ப்புக்கள் கிளம்பின. முடிவை மாற்றி எழுதச் சொல்லி பலர் ஜெயகாந்தனுக்கு கடிதங்கள் போட்டார்கள்.

வந்த எதிர்ப்புகளுக்குப் பதில் அளிக்குமுகமாக முடிவை மட்டும் மாற்றி, கங்காவின் தாய், வேறுவிதமாக நடந்திருந்தால் கதை எப்படிப் போயிருக்கும் என்பதை சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற ஒரு இலக்கிய நாவலாக எழுதினார். கதாபாத்திரங்களை, அவரவர் குணங்களின்படி உருவகித்து, அவர்களின் உரையாடல்கள் மூலம் கதையை நகர்த்துகிறார். ஆனாலும் கங்காவின் பார்வையில், அவளின் பேச்சு வழக்கிலேயே கதை நகர்கிறது.

அக் காலகட்டத்தை, கூடுதலாக பெண்கள் வீட்டுக்குள் புழங்கி, ஜாதிக் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து, மறைந்த காலத்துக்கும், பெண்கள் கல்வி கற்று வேலைக்குப் போகத்தொடங்கும் காலத்துக்கும் இடைப்பட்ட ஒரு யுகசந்தியாகப் பார்க்கலாம். அக் கால மாற்றத்தில் சிக்குண்ட மனிதர்களின் கதையாக இது அமைகிறது. ஆனால், சில நேரங்களில் சில மனிதர்கள் கதையின் முடிவும் வாசகர்களுக்குப் பிடிக்கவில்லை.

அதைத் தொடர்ந்து ஜெயகாந்தன் அவர்கள் கால மாற்றத்திற்கேற்ப, அதில் வந்த கதாபாத்திரங்கள் எப்படி மாறினர் என்பதை விவரித்து கங்கை எங்கே போகிறாள் நாவலை குமுதத்தில் எழுதினார்.

ஜெயகாந்தன் அவர்கள் எப்பொழுதும் வாசகர்களுடன் தொடர்பில் இருந்தார். அதனால் அவருக்கு வாசகர்களின் மனநிலை புரிந்தது. ஒரு நாவல் வாசகருக்குப் பிடித்தும், பிடிக்காமலும் இருக்க, அக்கதை எழுதப்பட்ட காலமும், சூழலும் கூட ஒரு காரணமாக இருக்கலாம். இன்று புரிந்து கொள்ளப்படாத கதை, பிற்காலத்தில் புரிந்து கொள்ளப்படலாம் என அவர் நம்பினார். எனக்கும் கூட சில நேரங்களில் சில மனிதர்கள் கதையை நான் சிறுபிள்ளையாக இருந்தபோது வாசித்த போது இருந்த மன நிலைக்கும் இப்போது வாசித்த போது இருந்த மனத் தாக்கத்துக்கும் நிறையவே வேறுபாடுகள் தெரிகின்றன. நீங்களும் ஒருதடவை வாசித்துப் பாருங்களேன்.



# சுட்ட பழமும், சுடாத பழமும்

## திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம்

கருங்காலி கட்டைக்கு நாணாத கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றேன்
ஈரிரவு துஞ்சாது என் கண்

இப்பாடல் பெரும் புலவர் ஔவையாரால் பாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ள ஔவைப்பிராட்டியார் காடு மேடெல்லாம் சுற்றித்திரிந்தவர். ஒரு முறை நடந்த களைப்பால் ஒரு மர நிழலில் இளைப்பாற இருக்கிறார். அப்படியே அண்ணாந்து பார்க்கும்போது மரத்திலே ஒரு மாடுமேய்க்கும் சிறுவனை காண்கிறார். அவன் மரத்திலிருந்து நாவல் பழங்களைப் பறித்து சாப்பிடுகிறான். களைப்பும், தாகமும் வாட்ட மரத்தின் கீழ் இருந்த பாட்டி, சிறுவனே எனக்கும் பழம் தருகிறாயா என்று கேட்கிறார். உடனே, சிறுவன் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்கிறான்.

இதென்ன பழத்தில் சுட்ட பழம் சுடாத பழம் என்று இருக்கிறதா என்று வியப்படைந்த பாட்டி, சரி சுட்ட பழமே போடு என்கிறார். மரத்தில் இருந்த சிறுவன், நன்கு பழுத்த பழங்களைப் போடுகிறான். பழுத்த பழங்கள் மணல் மீது விழுந்தும், பழத்தில் மண் ஒட்டிக்கொள்கிறது, பழங்களை கையில் எடுத்த ஔவைப்பாட்டி மணலை ஊதி, ஊதி சாப்பிடுகிறார்.

இதை பார்த்த சிறுவன், "பாட்டி பழம் நன்றாக சுடுகிறதா?" என்று வேடிக்கையாக கேட்டான்.

ஔவைப்பாட்டி திடுக்கிட்டு, சுட்ட பழம் என்று சிறுவன் கூறிய அர்த்தத்தை விளங்கி கொண்டு மேற்கூறிய பாடலைப் பாடினார்.

கருங்காலி மரம் மிகவும் வைரமானது. அதனை வெட்டும் கோடாலி வாழைமரத்தை வெட்டாது. வாழை மிருதுவான தண்டை உடையது, அதை வெட்ட சாதாரண ஒரு பெரிய கத்தியே போதுமானது (கோடாலி வாழை வெட்டுவதற்கு வேண்டியதில்லை).


இந்தக் காட்டில் எருமை மேய்க்கும் சிறுவனிடம் நான் தோற்றுப்போனேன் (அவன் என்னிலும் பார்க்க அறிவிற் பெரியோன் என்ற கருத்து). எனக்கு இந்த அவமானத்தால் இரண்டு இரவுகள் தூக்கம் வராது என்கிறார்.

இங்கே ஔவையாரின் தன்னடக்கம் காணப்படுகிறது. தனது தோல்வியை ஏற்றுக்கொள்கிறார். இவன் எருமை மேய்கிறவன்தானே? இவனுக்கு என்ன தெரியும்? என்ற இறுமாப்பு புலவருக்கு எற்படவில்லை. வெளிப்படையாகவே "நான் தோற்றேன்" என்று ஒப்புக்கொள்கிறார். எல்லாருக்கும் எல்லாம் தெரிய வாய்ப்பில்லை. எம்மிலும் சிறியவர்களிடம் கூட நாம் தோற்றுப் போகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படலாம் என்பதே பாட்டின் மூலம் அறிய முடிகிறது.





கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
சித்திரைச் சந்திப்பு 2023
On Sunday, 23 April 2023 from 10:00am to 3:00pm at ANU North Oval
(Corner of McCaughey Street and Barry Drive)
சித்திரைச் சந்திப்பு activities include...
Fun games like lemon n' spoon race, sack race, fancy dress,
three-egged-race and குதிரைக்கு வால் வைத்தல்.
கிளித்தட்டு, சடுகுடு, soccer, cricket.
Tug of war and...many more!
The ANU North Oval, where சித்திரைச் சந்திப்பு takes place is a fenced, secure environment, which is family friendly and kids safe!
RSVP one of the following by Tuesday, 18 April 2023 (family: $45, Single $20).
Both vegetarian and non-veg BBQ lunch will be available.
Thanga 0413 887 053
Ragu 0468 467 360
Chentha 0402 730 084
Bhavan 0466 961 535
Raagavan 0424 434 474
Alli 0467 225 731
Segar 0423 380 926
Anulan 0411 094 875
* Attendance to சித்திரைச் சந்திப்பு is by RSVP only!

வணக்கம் Members and Well-wishers,
Save the date...
to celebrate CTA's 40th year anniversary
20 May 2023 From 5:00pm
SAVE THE DATE
It is you who grew CTA for four long decades. So please join us as we celebrate you who are the reason for celebrating this 40th anniversary of CTA.
More detail is to come!
ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள் வைகாசி 20ம் திகதி, சனிக்கிழமை மாலைப் பொழுதை..!
உங்கள் அனைவரையும் கான்பெரா தமிழ்ச் சங்கத்தின் 40வது ஆண்டு விழாவைக் கொண்டாட மகிழ்ச்சியுடன் அழைக்கிறோம்.
கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
40
ANNIVERSARY
CELEBRATION
நான்கு நீண்ட தசாப்தங்களாக கான்பெரா தமிழ்ச் சங்கத்தை வளர்த்து விட்ட நீங்கள்,
40வது ஆண்டு விழாவையும் கொண்டாட வாருங்கள்!
மேலதிக தகவல்கள் மிக விரைவில்!
நன்றி
The Executive Committee, Canberra Tamil association Inc.

# பருவத்தே பயிர் செய்

தோட்டக்காரன்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல, கொரோனா பெருந்தொற்றிலிருந்து வெளியேவந்தாலும் உக்கிரேயின் போர் உக்கிரமடைவதினால் பணவீக்கம் குறைவதாயில்லை. நாளாந்தச் செலவுகள் கட்டுக்கடங்காமல் கூடிக்கொண்டே போகிறது,

மூன்று வருஷமாக லா நினா கொண்டுவந்த மழை வெள்ளத்தில் விளை நிலங்கள் மூழ்கியதால் மரக்கறி விலை தாறுமாறாய் கூடிப்போனது. குறையும் தானே என்று பார்த்துக்கொண்டிருந்தால், இந்தா வருகுது எல் நினோ என்கிறார்கள் - வரப்போகும் வறட்சி மரக்கறி, பழ விலை குறைய உதவப்போவதில்லை.

என்ன செய்யலாம்? உக்கிரேயின் போரை நிறுத்துவது எங்கடை கையிலை இல்லை. எல் நினோ, லா நினா வைப் பிடித்து வைப்பதும் எங்கடை கையிலை இல்லை. அப்ப என்னதான் செய்யலாம்? வீட்டுக்குப் பின்னால் (அல்லது முன்னால்) இருக்கிற நிலத்தைக் கொத்தி, நாலு மரக்கறியை நடலாம்.

இது, கடையில் போய் அறாவிலை கொடுத்து, களை கொல்லியும், பூச்சி கொல்லியும் செயற்கை உரமும் தின்று வளர்ந்த மரக்கறியை வாங்குவதற்குப் பதிலாக, சுத்தமான, இயற்கை முறையில், உங்கள் கண் முன்னே வளர்ந்த மரக்கறிவகையை சாப்பிட உதவும்.

கான்பெராவில் பங்குனிக்குப் பிறகு ஒன்றுமே வளராதே என்று நீங்கள் நினைப்பது விளங்குகிறது. கான்பெராவிலும், 12 மாதங்களும் பயிர் செய்யலாம். எந்த மாதத்தில் என்ன நடவேண்டும், எப்படிப் பராமரிக்க வேண்டும் எப்பொழுது அறுவடை செய்யவேண்டும் என்று தெரிந்து கொண்டால் இங்கேயும் மரம் வளர்க்கலாம்.

உதாரணத்துக்கு, கீழே உள்ள கான்பெராவுக்குப் பொருத்தமான இலையுதிர்கால நடவு வழிகாட்டி (autumn planting guide) அட்டவணையைப் பாருங்கள்.

## சிறு குறிப்புகள்

**Brassicas**
பங்குனி மாதத்தில் கோவா வகைகளின் தாமதமான நடவு வெற்றிகரமாக இருக்கலாம் ,ஆனால் கோடை நடவுகள் பொதுவாக மிகவும் நம்பகமானவை.

**Lettuce**
குளிர்கால lettuce வகை மட்டுமே நடவேண்டும் - (e.g. cos, salad bowl, oakleaf, butterhead and mignonette varieties).

**வெங்காயம்**
ஆரம்ப வகைகளை (early varieties) சித்திரை முதல் வைகாசி மாத தொடக்கத்தில் விதைத்து, வசந்த காலத்தில் இருந்து கோடையின் ஆரம்பம் வரை அறுவடை செய்யலாம். நடுப் பருவ வகைகள் (mid-season varieties) பெரும்பாலும் இலையுதிர் காலத்தின் பிற்பகுதியில் அல்லது குளிர்காலத்தின் தொடக்கத்தில் விதைக்கலாம். மற்றும் நீண்ட காலமாக வைத்திருக்கும் வகைகள் (long keeping varieties) குளிர்காலத்தில் அல்லது வசந்த காலத்தின் துவக்கத்தில் விதைக்கலாம்.

**Peas**
Sugar snap pea, குளிர்கால அறுவடைக்காக பங்குனி மாத தொடக்கத்தில் விதைக்கலாம், ஆனால் மலரை பாதிக்கும் கடுமையான உறைபனி இருந்தால் பயிர் இறந்துவிடும். சித்திரை-வைகாசி மாதங்களில் விதைக்கப்பட்ட pea வசந்த கால அறுவடைக்கு தயாராக இருக்கும்.

**குளிர்காலச் சங்கச் சங்கதிகள் குளிர்கால நடவு வழிகாட்டியைத் (winter planting guide) தாங்கி வரும்!**



| VARIETY | March | April | May |
|---|---|---|---|
| Asian greens | ST | T | - |
| Broad Beans | - | S | S |
| Broccoli | T | - | - |
| Brussel sprouts | T | - | - |
| Cabbage | T | - | - |
| Cauliflower | T | - | - |
| Chicory | ST | T | - |
| Chinese cabbage | T | - | - |
| Corn salad | ST | ST | - |
| Endive | ST | T | - |
| Garlic | - | S | S |
| Kale | T | - | - |
| Kohlrabi | ST | T | - |
| Leeks | T | - | - |
| Lettuce | ST | ST | ST |
| Onions | - | S | S |
| Peas | S | S | S |
| Turnips | T | - | - |

S—விதை நடவு (seeding) T—நாற்று நடவு (transplanting)